சொல்லிக் கொள்கிறேன் செஞ்சி தொகுதியிலே குடியிருக்கின்ற நரிக்குறவர்கள் நரசிங்கராயன் பேட்டை, முடையூர் கிராமங்களில் வட்டாட்சியர் அவர்களால் இடம் காட்டப்பட்டு அங்கு நிரந்தரமாக குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்க ஆவன செய்யப்படுமா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புவதோடு, அதே போன்று செஞ்சி வட்டம் அன்னமங்கலம் என்னுடைய சொந்த கிராமம். அந்தக் கிராமத்தில் காட்டு நாயக்கர்கள் 50 ஆண்டு காலமாக கல்லாங்குத்து புறம்போக்கில் வீடு கட்டி நிரந்தரமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க ஆவன செய்யப்படுமா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை செஞ்சி தொகுதியில் வீட்டுமனைப்பட்டா வேண்டி விண்ணப்பித்தவர்களில் தகுதியில்லாதவர்கள் போக பாக்கி உள்ள அனைவருக்கும் வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன. இனிமேல் வீட்டுமனைப்பட்டா வேண்டி விண்ணப்பதாரர்கள் மனு கொடுப்பார்களேயானால், தகுதியின் அடிப்படையில் அவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 49, திரு. ஆஸ்டின், மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.*

49—

வனத் தீயணைப்பு

***3222—திரு. ஆஸ்டின்:**

மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காடுகளில் ஏற்படும் தீயை அணைக்க ஹெலிகாப்டர் வசதியுடன் கூடிய வனத் தீயணைப்புப் படையை அரசு அமைக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, செய்தி, விளம்பரம்-வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2001 செப்டம்பர் 6]

(அ) காடுகளில் ஏற்படும் தீயை அணைக்க ஹெலிகாப்டர் வசதியுடன் கூடிய வனத் தீயணைப்புப் படையை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆஸ்டின் சார்பாக சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளில் ஏற்படும் தீயை அணைக்க ஹெலிகாப்டர் வசதியுடன் கூடிய வனத் தீயணைப்புப் படை அமைக்க வேண்டும் என்று ஆஸ்டின் கேட்டுவிட்டு **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிவபுண்ணியம், அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அது வேண்டாம்.

முற்பகல் 10-35

திரு. வை. சிவபுண்ணியம்: சரி, பேரவைத் தலைவருடைய வேண்டுகோளுக்கிணங்க அதை வாபஸ் பெற்றுக்கொள்கிறேன். இருந்தாலும் சில செய்திகளைச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. நீங்கள் குறிப்பிட்டுச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீயைப் பற்றி மட்டும் கேளுங்கள்.

திரு. வை. சிவபுண்ணியம்: குறிப்பாக உலக அளவில் இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் ஏற்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்ற செய்திகளையெல்லாம் தினசரி பத்திரிகைகளின் வாயிலாக நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். நமது நாட்டிலேயே வன வளம் இல்லாத காரணத்தினாலே மழை வளம் குறைந்து கொண்டே இருக்கிறது. ஆகவே வன வளத்தைப் பாதுகாக்கக்கூடிய வகையில் பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு இப்போது புதிய முயற்சியாக ஏற்பாடு செய்து அறிவித்திருக்கிறார்கள். ஆகவே அதையும் பாதுகாக்கக்கூடிய வகையிலே இந்தத் திட்டத்தினை மேற்கொள்வதற்கான முயற்சியை நமது அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்களின் அரசு நிச்சயமாக பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வில்வநாதன்.

திரு. இரா. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பரிசீலனையில் உள்ள 25 கிலோமீட்டர் தூரத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையம் என்ற வகையிலே சோளிங்கர் தொகுதியிலுள்ள காவேரிப்பாக்கம் பேரூராட்சிக்கு ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வில்வநாதன், இது மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாதது.

வினா எண் 50, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

50—

நிலத்தடி நீர்

***2128—திரு. பி.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலத்தடி நீர் மேம்பாடு செய்ய 15 ஏக்கர் நிலத்திற்கு 50 சென்ட் நிலத்தில் கட்டாயமாக நீர்த்தேக்கக் குட்டைகள் அமைக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிலத்தடி நீர் மேம்பாடு செய்ய 15 ஏக்கர் நிலத்திற்கு 50 சென்ட் நிலத்தில் கட்டாயமாக நீர்த்தேக்கக் குட்டைகள் அமைக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு அரசு ஆணையிட சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நிலத்தடி நீர் மிகக் கீழே சென்றுவிட்ட காரணத்தால் இன்னும் 10 ஆண்டு காலங்களில் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாத சூழ்நிலை வருமென்று ஆராய்ச்சியாளர்கள் எல்லாம் கூறி இருக்கிறார்கள்.